மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்குரைஞர்களிடமிருந்தும், சர்வீஸில் இருக்கின்றவர்களிடமிருந்தும் நீதித் துறைக்கு இது போன்ற பலரைத் தேர்ந்தெடுக்கும்பொழுது ஓரல் இண்டர்வியூ தான் மிகச்சிறந்த முறையாக இருக்கும் என்ற கருதப் பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. Whether one is in possession of thorough and profound knowledge can be instantly tested during the interview என்ற அடிப்படையில் செய்யப்படுகிறது. அதுவே சிறந்த முறையாக இருக்கும் என்பதால் அதை மாற்ற அரசுக்கு உத் தேசமில்லை.

அன்னூர், அவினாசி யூனியன்களில் அமைக்கப்பட்டுள்ள கைப் பம்புகள்

*வினா எண் 449—**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அன்னூர், அவினாசி யூனியன்களில் உள்ள 148 கைப் பம்புகளுள் 48 பம்புகள் வேலை செய்யாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றைப் பழுது பார்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 149 கைம்பம்பு களில் 24 கைப்பம்புகள் நிலத்தடி நீர் பற்றாக்குறையின காரணமாக இயங்காமல் உள்ளன. 10 கைப்பம்புகள் பழுது அடைந்துள்ளன.

(ஆ) 24 கைப்பம்புகள் உள்ள இடத்தில் ஆழ்த்துறை கிணற்றுடன் கூடிய மாற்று கைப்பம்புகள் அமைக்கும் வேலை கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்யப்பட்டு வருகின்றன. அன்னூர், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களி லுள்ள 10 கைப்பம்புகள் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த அன் னூர், அவினாசி யூனியன்களில் 149 கைப்பம்புகளில் 24 கைப் பம்புகள் நிலத்தடி நீர்பற்றாக்குறையின் காரணமாக இயங்க வில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். முதலில் கைப்பம்புகளைப் போடும்போதே 300 அடி ஆழம் வரையில்

1982 மார்ச் 12]

எந்த அளவுக்குத் தண்ணீர் இருக்கும், வறட்சியாக இருக்கும் போதும் எந்த அளவுக்கு சப்ளை இருக்கும் என்று பார்த்துத்தான் போடுகிறார்கள். அப்படி இருக்கும்போது எப்படி நிலத்தடி நீர் பற்றாக்குறை ஏற்பட்டது? எப்படி அதனால் பழு அடைந்தது? பொதுவாக பழுதுபார்க்கும் வேலையில் ஒரு சீரான ஏற்பாடு இல்லாத காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் ஒரு சீரான உடன்பாடு இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. ரிப்பேர் ஆனால் சீக்கிரமாக பழுதுபார்த்து, செயல்படுத்தும் ஏற்பாட்டை அரசாங்கம் உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நிரம்ப தண்ணீர் இருக்கும் என்ற நம்பிக்கையோடுதான் ஆழ் துளைக் கிணறுகள் வெட்டி, கைப்பம்புகள் பொருத்தப்படுகின்றன. சில இடங்களில் நாம் எதிர் பார்த்த அளவுக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. நாளை அவைக்கு வருவோம் என்ற நம்பிக்கையோடுதான் போகிறோம். சிலர் இடையிலே போய்விட்டால் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) எப்படியும் வருவோம் என்ற நம்பிக்கையில்தான் போகிறோம். ஆக அந்த அடிப்படையில்தான் இடத்தைப் பார்த்து, நீரின் அளவைப் பார்த்துதான் செய்கிறோம். சில நேரங்களில் தவறு ஏற்பட்டுவிடுகிறது. அந்த 24 கைப்பம்புகளுக்கும் தண்ணீர் சப்ளை வரவில்லை என்பதால் மாற்று கைப்பம்புகள் 24 போடும் வேலை நடைபெற்று வருகிறது, விரைவில் வேலை முடிந்து விடும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், நிலத்தடி நீர் இல்லாததால் சில பம்புகள் வேலை செய்யாத நிலையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த ஏரியா முழுவதும் வறண்டுபோய் இருக்கிறது. அங்கே தண்ணீர் வசதி இல்லை. இந்த நிலையில் எவ்வளவு ஆழத்தில் பம்பு செட்டைப் பொருத்தினாலும் நிலத்தடி நீர் இல்லாமல் இருக்கும்போது அங்கே விசேஷமான ஒரு குடிநீர் விநியோகத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். மேட்டுப்பாளையம் ஆற்றில் இருந்தோ மற்ற பகுதிகளிலிருந்தோ ஒரு திட்டத்தைப் போட்டு, இந்தப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியுமா? அல்லது வேறு எந்த வகையில் குடிநீர் திட்டத்தை செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 24 பம்புகளுக்குப் பதிலாக மாற்று பம்புகள் போடப்படுகின்றன. அந்த வேலை நடைபெறுகிறது. 10 பம்புகள் ரிப்பேர் செய்யப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகின்றன. தண்ணீர் வராத 24

பம்பு செட்டுகளுக்கும் எஞ்சினீயர்கள் மாற்று இடங்களைப் பார்த்து பம்பு செட்டுகள் பொருத்தும் வேலையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இதில் வெற்றி பெறுவோம் என்று நம்பலாம்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் பலமுறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பம்புசெட்டுகள் பழுதடைந்து இருக்கின்றன என்று சொல்வதும், மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லை என்று சொல்வதுமாக இருந்தது. அதனால்தான் இந்தக் கேள்வியே இங்கே வந்தது. எப்படி இருந்தாலும் பம்செட் மோட்டார் ரிப்பேர் செய்யும் பணியை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட பின்னால் அது சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பதை நாங்கள் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறோம். ஆகவே, உள்ளாட்சி நிறுவனங்களுக்கே குறைந்தபட்சம் பழுதுபார்க்கும் பணியையாவது ஒப்படைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதுபற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அந்தந்த சமயத்திற்கு ஏற்றாற்போல் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்தக் கருத்தைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 9—40)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, பம்ப் செட்டுகளின் மெயின்டனன்ஸைப் பொறுத்தவரையிலே அதனைக் குடிநீர் வாரியத்திலிருந்து எடுத்துவிட்டு, மீண்டும் பஞ்சாயத்து போர்டுகளிலே கொடுப்பதற்காக உத்தரவுகள் போட்டதாகவும் அரசு அதை உடனடியாக அமல்படுத்தி இருப்பதாகவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே வந்திருக்கின்றது. முதலமைச்சர் அவர்கள் அப்படி ஏதாவது ஒரு கருத்தினைச் சொல்லி அதற்கான உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றதா என்பதை அறிவிப்பார்களா ? அந்தப் பொறுப்புக்கள் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விரிவான பதில் தரப்படும்.